**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:9

| | | | |
|---|---|---|---|
| Name | வீரன் (PW9) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, சின்னியம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.04.2023ம் தேதியன்று மாலை சுமார் 05.30 மணியளவில் சிவகிரி சின்னியம்பாளையம் எனது வீட்டிற்கு அருகில் போலீசார் ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக வரைபடம் போட்டு அதில் என்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

போலீசார் விசாரணையின்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற சங்கதிகள் தெரியாது என்றால் சரிதான். போலீசார் வரைபடம் வரையும் போது விபத்தில் சிக்கிய வாகனங்கள் அங்கு இருந்தது என்றால் சரிதான். போலீசார் புகைப்படம் எடுத்தது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே தயார் செய்து வைத்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.09 07:10:36 +0530

சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக தவறாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.09 07:10:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.